| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி.ரா.சுமதி.<br>மாவட்ட சமூகநல அலுவலர்,<br>மாவட்ட சமூகநல அலுவலகம்,<br>திருப்பத்தூர். | சமூகநல ஆணையர்,<br>சமூகநல ஆணையரகம்,<br>லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம்,<br>காமராஜர் சாலை,<br>சென்னை-05 |

ந.க.எண். 731/அ1/2024 நாள். 31 .05.2024

அம்மையீர்,

பொருள் : பணியமைப்பு – மாவட்ட சமூகநல அலுவலகம், திருப்பத்தூர் மாவட்டம் – திரு.ஜெ.இராம்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்ய கருத்துரு அனுப்புதல் – தொடர்பாக.

பார்வை :
1. சமூகநல ஆணையர், சென்னை-15 அவர்களின் செ.மு.ந.க.எண்.21661/நிரு4(3)/2023, நாள்.05.09.2023
2. தனியரது பணிப்பதிவேடு மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்

*******

பார்வை 1-ல் காணும் செயல்முறை ஆணையின்படி திருப்பத்தூர் மாவட்ட சமூகநல அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.ஜெ.இராம்குமார் என்பவருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க கோரி கருத்துரு மற்றும் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து பணிந்தனுப்பப்படுகிறது.

| வ.எண் | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | பணிநியமன முறை | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1. | திரு.ஜெ.இராம்குமார், இளநிலை உதவியாளர், மாவட்ட சமூகநல அலுவலகம், திருப்பத்தூர். | கருணை அடிப்படை | 11.09.2023 முற்பகல் |

ஒம்: சுமதி 31/05/24
மாவட்ட சமூகநல அலுவலர்,
திருப்பத்தூர்.

இணைப்பு

பா.சீ 31/05/24

1. கருத்துரு மற்றும் பணிப்பதிவேடு
2. இறந்த அரசு ஊழியரின் கணவர் தனது வாரிசுதாரரான மகன் திரு.ஜெ.இராம்குமார் என்பவருக்கு பணிநியமனம் கோரிய கடிதம் (நகல்)
3. கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி முதன் முதலில் விண்ணப்பித்த விண்ணப்பதாரரின் கடிதம் (நகல்)

4. இறப்பு சான்றிதழ் (அசல்)
5. வாரிசு சான்றிதழ் (அசல்)
6. ஒருங்கிணைந்த சான்றிதழ் (அசல்)
7. பிற வாரிசுதாரர்களின் ஆட்சேபணையின்மை கடிதம் (நகல்)
8. பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் (அசல்) / உண்மைத்தன்மை (அசல்)
9. விண்ணப்பதாரரின் உறுதிமொழி – அரசாணை (நிலை) எண்.29 (நகல்)
10. தனியரின் பணி நியமன ஆணை (நகல்) – மேலொப்பமிட்டது
11. கருணை அடிப்படை பணி நியமனம் பெற்ற தனியரின் முதல் பக்கம் பணிப்பதிவேடு (நகல்) மற்றும் பணிநியமனம் குறித்த பணிப்பதிவேட்டின் பக்கம் (நகல்) – மேலொப்பமிட்டது
12. இறந்த அரசு ஊழியரின் முதல் பக்கம் பணிப்பதிவேடு (நகல்) மற்றும் பணிவரன்முறை குறித்த பணிப்பதிவேட்டின் பக்கம் (நகல்) – மேலொப்பமிட்டது.

## இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்வதற்கான கருத்துரு படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | திரு.ஜெ.இராம்குமார் | தொகுதி–1 பக்க எண்.3 |
| 2. | பதவி | இளநிலை உதவியாளர் | தொகுதி–1 பக்க எண்.10 |
| 3. | பணிபுரியும் அலுவலகம் | மாவட்ட சமூகநல அலுவலகம், திருப்பத்தூர். | தொகுதி–1 பக்க எண்.10 |
| 4. | பிறந்த தேதி | 05.06.1990 | தொகுதி–1 பக்க எண்.3 |
| 5. | பணி நியமன முறை | கருணை அடிப்படை (சமூகநல ஆணையர், சென்னை–15 அவர்களின் செ.மு.ந.க.எண்.21661/நிரு4(3)/2023, நாள்.05.09.2023) | தொகுதி–1 பக்க எண்.10 |
| 6. | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | 11.09.2023 முற்பகல் | தொகுதி–1 பக்க எண்.10 |
| 7. | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்யப்பட வேண்டிய நாள் | 11.09.2023 முற்பகல் | |
| 8. | கல்வித் தகுதி | பத்தாம் வகுப்பு தேர்ச்சி | தொகுதி–1 பக்க எண்.7 |
| 9. | பத்தாம் வகுப்பு தேர்ச்சி உண்மைத்தன்மை விவரம் | உதவி இயக்குநர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம், வேலூர் அவர்களின் கடித ஓ.மு.எண்.004818/அ4/2023 நாள்.07.11.2023 | தொகுதி–1 பக்க எண்.13 |
| 10. | ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இருப்பின் அதன் விவரம் | ஏதும் இல்லை | |
| 11. | அலுவலரின் பரிந்துரை | பரிந்துரை செய்யப்படுகிறது | |

### சான்று

மேற்காணும் விவரங்கள் அனைத்தும் தனியரின் பணிப்பதிவேட்டுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது என சான்றளிக்கப்படுகிறது.

பா.சுமதி 31/05/24
மாவட்ட சமூகநல அலுவலர்,
திருப்பத்தூர்.

மா.ச.நூ
31/05/24

## பணி சரிபார்ப்பு சான்று

பெயர் : திரு.ஜெ.இராம்குமார்

பதவி : இளநிலை உதவியாளர்

பணிபுரியும் அலுவலகம் : மாவட்ட சமூகநல அலுவலகம், திருப்பத்தூர் மாவட்டம்.

| வ.எண். | பணிக்காலம் | | பணிப்பதிவேடு பக்க எண். |
|---|---|---|---|
| | முதல் | வரை | |
| 1. | 11.09.2023 | 31.12.2023 | தொகுதி.1 பக்க எண்.68 |
| 2. | 01.01.2024 | 30.04.2024 | தொகுதி.1 பக்க எண்.68 |

ரா.சுமதி 31/05/24
மாவட்ட சமூகநல அலுவலகம்,
திருப்பத்தூர்.

31/05/24

விடுநர்,

இர. ஜெயக்குமார்,

91/96, புதுமனைத்தெரு, அத்திக்குப்பம்,

நேமந்தபுரம் அஞ்சல் ஒடுகத்தூர் வழி அணைக்கட்டு வட்டம்,

வேலூர் மாவட்டம் 632103.

பெறுநர்,

வட்டார ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்,

வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகம்,

23, பிள்ளையார் கோயில் தெரு, புதுப்பேட்டை, குடியாத்தம்,

குடியாத்தம் வட்டம், வேலூர் மாவட்டம் 632602.

அம்மா,

| | |
|---|---|
| பொருள்: | எனது மனைவி R.லூர்துமேரி மேற்பார்வையாளர் நிலை 2 ஆக பணிபுரிந்து வரும் சமயம் பணியின்போது 11.02.2021ல் இறந்து விட்டார். எனது மகன் ஜெ. இராம்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு கோருதல் – தொடர்பாக. |

*******

நான் வேலூர் மாவட்டம் அணைக்கட்டு வட்டம் அத்திக்குப்பம் கிராமத்தில் என் மனைவி பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தேன். எனது மனைவி திருமதி R. லூர்துமேரி அவர்கள் குடியாத்தம் வட்டார ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்தில் மேற்பார்வையாளர் நிலை 2 ஆக பணி புரிந்து வரும் சமயம் பணியின்போது 11/02/2021ல் இறந்துவிட்டார். எனக்கு தற்போது 67 வயதாகிறது உடல்நிலை சரியில்லாமல் அவ்வபோது மருத்துவமணைக்கு சென்று சிகிச்சை பெற்று வருகிறேன். எனது மனைவி இறந்தபிறகு குடும்பம் மிகவும் துயரத்திலும், வறிய நிலையிலும், வாழ்ந்து வருகிறோம். எனது மகன் ஜெ. இராம்குமார் என்பவர் Bsc(cs),M.B.A. முடித்துள்ளார்.

எனவே எனது குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு எனது மகன் ஜெ. இராம்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்கிடுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள

[signature] 10/3/23

இடம் :- குடியாத்தம்

நாள் :- 10/03/2023

மாவட்ட சமூகநல அலுவலர்
திருப்பத்தூர் மாவட்டம்.

31/05/24

மா.தஸ
31/05/24

ஜெ.இராம்குமார் s/o R.ஜெயக்குமார்,
.../96 புதுனைத்தெரு, அத்திக்குப்பம்(கி),
நேமந்தபுரம்(அ), ஒடுகத்தூர்(வழி),
அணைக்கட்டு வட்டம், வேலூர் மாவட்டம் - 632103,
மொ. நெ. 7639976603, 8838186340,

வளர்ச்சி தி... அலுவ...
நாள் 14.6.2021
மோ: மா
குடியாத்தம்

பெறுநர்,

வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்,
வட்டார ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகம்,
No.23,பிள்ளையார் கோயில் தெரு,
புதுப்பேட்டை, குடியாத்தம்,
வேலூர் மாவட்டம் -632602.

அம்மா,

பொருள்: கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி உரிய படிவம்(ம) ஆவணங்கள் சமர்ப்பித்தல் - தொடர்பாக.

பார்வை: அரசாணை(நிலை)எண்-18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ1) நாள்: 23/01/2020.

***********

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், அத்திக்குப்பம் கிராமத்தில் வசித்துவந்த எனது தாயார் திருமதி. R. லூர்துமேரி அவர்கள், குடியாத்தம் ICDS அலுவலகத்தில் மேற்பார்வையாளர் கிரேடு 2ஆக பணிபுரிந்து வந்தார். அவர் பணியின்போது, திடீரென்று 11/02/2021 அன்று மாரடைப்பு ஏற்பட்டு இறந்து விட்டார். இவரது மூத்த மகன் ஜெ.இராம்குமார் ஆகிய நான் BSc(cs),MBA,. படித்துள்ளேன்.

பார்வையில் காணும் அரசாணையின்படி கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு கோரி கீழ்காணும் ஆவணங்கள் பணிந்து சமர்ப்பித்துள்ளேன்.

1. கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு கோரி அமைந்த படிவம் 5நகல்கள்(மறுப்பில்லா படிவம் உட்பட).
2. கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு கோரி இராம்குமாராகிய எனது விண்ணப்பம் 5 நகல்கள்.
3. இறந்த அரசு ஊழியராகிய எனது தாயாரின் மரணச்சான்றிதழ் நகல் 5.
4. சாதிச்சான்று நகல் 5.
5. இருப்பிடசான்று நகல் 5.
6. வாரிசு சான்று நகல் 5.
7. மறுப்பில்லா சான்று நகல் 5.
8. வருமானச்சான்று நகல் 5.
9. பிறப்புச்சான்று நகல்5.
10. SSLC மதிப்பெண் சான்று நகல் 5.
11. +2 மதிப்பெண் சான்று நகல்5.
12. மாற்றுச்சான்று நகல்5.(Transfer Certificate).
13. BSc(cs) மதிப்பெண் சான்று(Consolidate Mark Sheets), திருவள்ளுவர் பல்கலைக்கழகம் வழங்கிய பட்டமளிப்பு விழா(Convocation Certificate) (ம) (Provisional Certificate). நகல்5.
14. MBA மதிப்பெண் சான்று(Consolidate Mark Sheets), அண்ணா பல்கலைக்கழகம் வழங்கிய பட்டமளிப்பு விழா (Convocation Certificate) (ம) (Provisional Certificate) நகல்5.

மா. சநஅ 31/05/24
மாவட்ட சமூகநல அலுவலர்
திருப்பத்தூர் மாவட்டம்.

மா.சநஅ
31/05/24

15. தட்டச்சு ஆங்கிலம், இளநிலை மற்றும் முதுநிலை சான்று தலா நகல்5.
16. வேலைவாய்ப்பு பதிவு அட்டை நகல்5.

மேற்காணும் விவரப்படி அனைத்தும் சான்றுகளும் இத்துடன் இணைத்து கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு கோரி பணிந்து சமர்ப்பித்துள்ளேன். எனது விண்ணப்பதின் பேரில் கருணையுடன் பரிசீலித்து கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு பெற்று வழங்கிட, பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இணைப்பு: மேற்கண்டவாறு.

இடம்: குடியாத்தம்

நாள்: 4/06/2021

தங்கள் உண்மையுள்ள

(J. Ram...)

DR. சுமதி 31.05.24
மாவட்ட சமூகநல அலுவலர்
திருப்பத்தூர் மாவட்டம்.

மா.சு.நெ.
31/05/24